வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 22.01.2026 வியாழக்கிழமை | இதழ் : 22 | பக்கங்கள் : 08

## கல்வி மறுசீரமைப்பை அமுலாக்க அரசாங்கம் புதிய பொறிமுறை!

### ஜனாதிபதி அநுர குமார அறிவிப்பு

கொழும்பு, ஜன. 22

கல்வி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதில் எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், நிபுணர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினர்களையும் ஒன்றிணைத்த - முறையான சட்டக் கட்டமைப்புடன் கூடிய பொறிமுறையை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அந்தத் தரப்பினரை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு

07



# இலங்கை பொருளாதார மீட்சிக்கு தொடர்ந்து முழுமையான ஆதரவு

### சர்வதேச நாணய நிதியம் உறுதி

டாவோஸ், ஜனவரி 22

"இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) தனது முழுமையான ஆதரவைத் தொடர்ந்து வழங்கும்", என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா உறுதியளித்துள்ளார்.

சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் 2026ஆம் ஆண்டுக்கான உலக பொருளாதார மாநாட்டில் பிரதமர் ஹரிணி அமரசூரிய சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவாவை சந்தித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

அண்மையில், டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவுகளுக்கு மத்தியில் இலங்கை மக்கள் வெளிப்படுத்திய மன உறுதியை பாராட்டிய அவர், நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியம் துணை

07




## 16ஆவது சர்வதேச வர்த்தக கண்காட்சி நாளை ஆரம்பம்

இ.ராஜ்குமார், த.பிரதீபன், பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், ஜன. 22

"யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2026 நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை முற்றவெளியில் நடைபெறவுள்ளது என்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பினர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

பொருளாதார முன்னேற்றத்துக்கான

07

## புலம்பெயர் தமிழர்கள் யாழில் முதலிடுவார்கள்

### பிரித்தானிய தூதுவர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 22

பிரித்தானியாவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை செய்வார்கள் என்று அந்த நாட்டின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

07



## வடக்குக்கு சென்று அநுர இனவாதம் பேசக்கூடாது!

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 22

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக நாங்கள் போராடினோமே தவிர, தமிழர்களுக்கு எதிராக போராடவில்லை. கதிர்காமத்துக்குச் செல்வதற்கு தமிழர்களுக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. வடக்குக்கு சென்று ஜனாதிபதி அநுர குமார இனவாதம் பேசக் கூடாது - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல்

07

## இருபது -20 உலகக் கிண்ணத்தை காட்சிப்படுத்தும் நிகழ்வு ஆரம்பம்

### யாழ்ப்பாணத்துக்கும் எடுத்து வரப்படும்



கொழும்பு, ஜன. 22

இலங்கை, இந்தியா இணைந்து இந்த ஆண்டு நடத்தவுள்ள இருபது - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை காட்சிப்படுத்தும் நிகழ்வு நேற்று

07

## பரந்தன் இரசாயன தொழிற்சாலை மீள்நிர்மாணத்திற்கு நேற்று அடிக்கல்

கிளிநொச்சி, ஜன. 22

பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீளவும் நிர்மாணிப்பதற்காக நேற்று புதன்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டது.

சர்வமத தலைவர்களின் ஆசியுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் தொழிற்சாலைக்கான பெயர் பலகை திறப்பும் அடிக்கல் நாட்டலும் அந்தத் தொழிற்சாலையின் முன்னாள் பணியாளர்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன.

07



## பௌத்தத்தை பாதுகாப்பது ஆட்சியாளர்களின் கடமை!

### முன்னாள் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜன. 22

"நாட்டின் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளனர். அந்நியர் ஆட்சியின் போதுகூட பௌத்தத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனவே, தற்போதைய ஆட்சியாளர்கள் இந்தப் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியாது", என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

07

## வடக்கில் முதலீடுகளை செய்வதற்கு சாதகமான சூழல் உருவாகியுள்ளது

### வடக்கு ஆளுநர் வேதநாயகன்

இ.ராஜ்குமார், பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், ஜன. 22

"கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் முதலீடுகளை செய்ய வந்தவர்கள், சாதகமற்ற சூழல் காரணமாக திரும்பிச் சென்றதே வரலாறாக இருந்தது. ஆனால், தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் முதலீட்டுக்கு மிகவும் சாதகமான சூழல் உருவாகியிருக்கிறது - என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு - 2026 நேற்று யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

07

## கைதிகளின் தண்டனை காலத்தை குறைக்க குழு!

கொழும்பு, ஜன. 22

சிறைச்சாலையில் காணப்படும் நெரிசலை குறைப்பதற்கு தண்டனைக் கைதிகளின் தண்டனை காலத்தை குறைக்கும்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சட்டவிரோத மின்வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 22

சட்டவிரோத அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு யானை ஒன்று உயிரிழந்தது.

கிளிநொச்சி - கல்மடுக்குளம் - நெத்தலியாறு பகுதியிலுள்ள வயல் நிலம் ஒன்றிலேயே இந்த யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# தாளையடி அந்தோனியார் ஆலய பங்கின் குருமனைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். மறை மாவட்டத்தின் தாளையடி புனித அந்தோனியார் ஆலய பங்கின் குருமனைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஆரம்பமானது.

குருமனைக்கான அடிக்கல்லை குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் நாட்டி வைக்க அதனைத் தொடர்ந்து தாளையடி பங்குத்தந்தை அருட்பணி ஆதர் ஜஸ்ரின் மற்றும் ஏனைய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளாலும் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. (அ)



# மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டில், மெத்தை அன்பளிப்பு

வடமராட்சி, ஜன. 22

பருத்தித்துறை பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கு கட்டில், மெத்தைகள் வழங்கி வைக்கப்பட்டன.



பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் உடுத்துறை, வெற்றிலைக்கேணி, நிதித்திய வெட்டை, கேவில், பகுதிகளைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கே அவை வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், பருத்தித் துறை பிரதேசசபை 12ஆம் வட்டார உறுப்பினர் பி. அலஸ்ரன், தவிசாளர் யுகதீஸ் ஆகி யோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரஜாசக்தி முறைமை தவறு; எதிராக நடவடிக்கை எடுப்போம்

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், ஜன. 22

பிரஜாசக்தி முறைமை தவறானது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஊடக பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரஜாசக்தி திட்டத்தின் கீழ் கிராம மட்டங்களிலே ஜே. வி. பி. மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் எல்லோரையும் ஓரங்கட்டி தனது பிரதிநிதிகளை நியமிக்கின்ற போக்குக் காணப்படுகிறது. இது, சட்டவிரோதமான செயல் - என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் தமிழ் அரசு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் நடத்திய சந்திப்பின் பின்னர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## நந்தன குணதிலகவின் மரணத்தில் சந்தேகம்!

கொழும்பு, ஜன. 22

முன்னாள் அமைச்சர் நந்தன குணதிலகவின் மரணம் தொடர்பில் பல்வேறு அரசியல் தரப்பினரால் சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வரும் நிலையில், அவரது குடும்பத்தினர் இறுதிச் சடங்கு ஏற்பாடுகளில் அதிரடி மாற்றங்களைச் செய்துள்ளனர்.

இது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நந்தன குணதிலக்கவின் மரணம் இயற்கை மரணமா அல்லது திட்டமிட்ட கொலையா என்ற சர்ச்சை எழுந்துள்ள நிலையில், எதிர்கால விசாரணைகளுக்கு ஏதுவாக அவரது உடலைத் தகனம் செய்வதற்குப் பதிலாக அடக்கம் செய்ய குடும்பத்தினர் தீர்மானித்துள்ளனர்.

நந்தன குணதிலகவின் சகோதரி மங்கள கருணாரத்ன, வத்தேகமவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது குறித்து விளக்கமளித்தார்.

அரசியல் மற்றும் பொருளாதாரக் குற்றங்களைக் கண்காணிக்கும் சர்வதேச அமைப்பு ஒன்றில், தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறி கடந்த ஒக்ரோபர் மாதம் நந்தன குணதிலக முறைப்பாடு செய்துள்ளதாக அவர் கூறினார்.

முன்னதாக, நேற்று புதன்கிழமை வத்தேகம பொது மைதானத்தில் உடல் தகனம் செய்யப்படவிருந்தது.

ஆனால், தற்போது வெளிவந்துள்ள திடுக்கிடும் தகவல்களால், மகா வத்தேகம வேரகம பொது மயானத்தில் உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது.

உடலை எரித்துவிட்டால் ஆதாரங்கள் அழிந்துவிடும் என்பதால், எதிர்காலத்தில் தேவைப்படின் உடலைத் தோண்டியெடுத்து பரிசோதனை செய்ய வசதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# புதிய பயங்கரவாத சட்டம் திறந்த கலந்துரையாடல்!



யாழ்ப்பாணம், ஜன. 22

பயங்கரவாதத்திலிருந்து அரசாங்கத்தை பாதுகாப்பதற்கான முன்மொழியப்பட்ட சட்ட வரைவு தொடர்பான திறந்த கலந்துரையாடல் சட்டம், கொள்கைகளுக்கான யாழ்ப்பாண கற்கை நிலையத்தின் ஒருங்கிணைப்பில் நேற்று முன்தினம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் அரசியல் பிரமுகர்கள் சமூக செயல்பாட்டாளர்கள், இளையோர் மற்றும் மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகளென ஏறத்தாழ 100 பேரளவில் பங்குபற்றியிருந்தனர். (ஐ - 03-05)

# நல்லூர் பிரதேச சபையின் உப பணிமனைகள் மூடப்படும்

## தவிசாளர் மயூரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர், கொக்குவில் உப அலுவலகங்கள் தலைமை பணிமனையுடன் இணைக்கப்படவுள் ளன என்று அந்த சபையின் தவிசாளர் ப. மயூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

எதிர்வரும் 09.02.2026 திங்கட்கிழமை முதல் நல்லூர் உப அலுவலகம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படும். இதேபோல், இந்த வருட நடுப்பகுதியில் கொக்குவில் உப அலுவலகம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படும்.

குறித்த உப அலுவலகங்கள் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட பிற்பாடு சோலை வரி, வருமான பகுதி, கட்டுமானத்துக்கான அனுமதி வழங்கும் பகுதி, பொதுமக்கள் முறைப்பாட்டு பகுதி போன்ற புதிய கிளைகள் தலைமை அலுவலகத்தில் உருவாக்கப்படும்.

அத்துடன், உப அலுவலகங்கள் ஆயுள்வேத வைத்தியசாலை, சுயதொழில் ஊக்குவிப்பு தொழில் மையமாகவும் மாற்றப்படும். அத்துடன், செயலமர்வுகளுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் - என்றுள்ளது. (ஐ)

## திருவாசக விழாவும் பொங்கல் நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜன. 22

இந்து சமய அலுவல்கள் திணைக்களம் நல்லூர் சங்கிலியன் மன்றம் இணைந்து நடத்தும் திருவாசக விழாவும் பொங்கல் நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

சங்கிலியன் மன்றத்தில், அந்த நிலையத்தின் தலைவர் வி. ஜனகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநுருத்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## சொற்பொழிவு

வடமராட்சி, ஜன. 22

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் ஆன்மீக அருளுரை மகாபாரதம் என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த சொற்பொழிவை ஆசிரியர் இரா. செல்வவடிவேல் ஆற்றுவார்.

இந்த நிகழ்வு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

# கைதான இந்திய மீனவர்கள் ஏழு பேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 22

நெடுந்தீவு அருகே எல்லைத் தாண்டிய கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, நீதிவான் அவர்களை எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். இவர்களிடமிருந்து இரண்டு படகுகளும் கடற்படையால் கைப்பற்றப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
22.01.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், தை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழர்களுக்கான ஓர் அரசியல் ஆவணம்

முன்னர் எதிரும்புதிருமாக செயல்பட்ட - பொதுவெளிகளில் ஒருவர்மீது ஒருவர் துரோகி, ஒட்டுக் குழு போன்ற சொற்களை வீசிக் கொண்டிருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஐந்து கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கான ஆவணம் ஒன்றை தயாரிக்கவுள்ளன எனறு அறிவித்திருக்கின்றன. அடிப்படையில், இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான். ஆனால், குறிப்பிட்ட ஆவணத்தில் முன்வைக்கப்படும் விடயங்கள் உள்ளக மற்றும் வெளியக அரசியல் சூழ்நிலைகளுக்கு ஒத்திசைவான ஒன்றாகவும் இருக்க வேண்டியது அவசியம். தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் பொதுவாக யதார்த் தமற்ற விடயங்களை முன்வைப்பதில், அவர்களுக்கு நிகர் அவர்களே!

இந்த முயற்சியுடன் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளையும் இணையு மாறும் அவர்கள் அழைப்பு விடுத்திருக்கின்றனர். எத்தனை தமிழ்த் தேசிய கட்சிகள் வெளியில் இருக்கின்றன? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இருக்கிறது - அவர்களும் இலங்கை தமிழ் அரசு கட்சியும் இணைந்து செயல்படுவதில் பெரிய தடைகள் இல்லை. ஆனால், ஒரு நாடு இரு தேசம் என்னும் சுலோகத்தை உச்சரிக்காத வரையில் முன்னணியும் ஏனையவர்க ளும் ஒரு புள்ளியில் சந்திப்பது இயலாத காரியம்.

இப்போது கேட்க வேண்டிய கேள்வி - தமிழ்த் தேசிய கட்சிகள் என்று அழைப்பது சரியானதா அல்லது தமிழ் கட்சிகள் என்று அழைப்பது சரியானதா? அரசாங்கத்தோடு தொடர்பிலிருந்தவர்கள் தமிழ்த் தேசிய கட்சி என்னும் வகைக்குள் அடங்க மாட்டார்கள் என்றால், பலரின் தகுதி கேள்விக்குரியது. ஏனெனில், பலர் பல்வேறு காலகட்டங்களில் அரசாங்கத் தோடு இணைந்து செயல்பட்டவர்கள்தான். எதிர்காலத்திலும் அவர்கள் அரசாங்கங்களோடு கைகுலுக்க மாட்டார்கள் என்பதற்கும் உத்தரவாதம் இல்லை - ஏனெனில், அரசியல் தேவைகள் கருதி அரசாங்கங்களோடு உறவாடுவது தவறான ஒன்றல்ல - மாறாக, சொந்த நலன்களுக்காக அரசாங்கத்தை அரவணைப்பதுதான் அரசியல் ரீதியில் தவறானது.

இந்தப் பின்புலத்தில் தமிழர்களுக்கான அரசியல் ஆவணம் ஒன்றைத் தயார் செய்வதுதான் உண்மையான நோக்கம் என்றால், முடிந்தவரையில் அனைத்து தமிழ் கட்சிகளையும் ஓரிடத்துக்கு கொண்டுவர வேண்டும். அவ்வாறானதொரு பரந்த உரையாடலின் மூலம் மேற்கொள்ளப்படும் முயற்சிதான் இன்றைய சூழலுக்கு ஏற்புடையதாக இருக்கும். முடிந்தவரை யில் அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்திக்கும்போதுதான் அதனை ஓர் அரசியல் பலமாக காண்பிக்க முடியும்.

இன்றைய நிலையில், அரசியல் பலம் என்று கூறுவதற்கு எதுவுமில்லை என்பது உண்மையாயினும்கூட வடக்கு - கிழக்கில் இயங்கும் சிறிய - பெரிய கட்சிகள் என்னும் பாகுபாடில்லாமல் - தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஓர் உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன என்பதை ஒரு தமிழ் அபிப்பிராயமாக முன்வைக்க முடியும். இந்த இடத்தில் தேர்தல் கணக்கு பொருத்தமற்றது.

பொதுவாக தேர்தல் கணக்கின் அடிப்படையில்தான் தமிழ் கட்சிகளின் பலம் நிறுத்துப் பார்க்கப்படுவது உண்டு. ஆனால், இது தவறானதொரு பார்வை. ஓர் அரசியல் தீர்வை எதிர்பார்த்திருக்கின்ற இனத்தின் சார்பில் முன்னெடுக்கப்படும் அரசியலில் எப்போதும் பெரும்பாலானவர்கள் ஒரு நிலைப்பாட்டில் நிற்கின்றனர் என்பதுதான் செய்தியாக இருக்க வேண்டும். ஏனெனில், அரசாங்கங்கள் பேச்சு என்று வருகின்றபோது பல தமிழ் கட்சிகளும் பங்குகொள்ள வேண்டும் என்னும் நிலைப்பாட்டையே முன்வைக்கும். அரசாங்கங்களைப் பொறுத்தவரையில் அது ஓர் அரசியல் தந்திரோபாயம். இந்தத் தந்திரேபாயத்தை எதிர்கொள்ள வேண்டுமாயின், முதலில் தமிழ்க் கட்சிகள் என்னும் அடிப்படையில் அனைவரும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம். தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ் கட்சிகள் என்னும் பிளவை உள்ளுக்குள் பேணிப் பாதுகாக்க முயற்சித்தால் இறுதியில் அது அரசாங்கத்தின் தந்திரோபாயத்துக்கான மூலதனமாகவே இருக்கும்.

# மீண்டும் தலைதூக்கும் தொழுநோய்!

*கொழும்பு, ஜன. 22*

*2025 ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தம் 1,282 புதிய தொழுநோய் நோயாளர்கள் பதிவாகியுள்ள தாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*இவர்களில் சுமார் 10 வீதமானோர் 15 வயதிற்குட் பட்ட சிறுவர்கள் என அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.*

*உலக தொழுநோய் தின த்தை முன்னிட்டு நடை பெற்ற ஊடக சந்திப்பில், சுகாதார அமைச்சின் தொழு நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் யசோமா வீரசேகர முக்கிய தகவல்களை வெளியிட்டார்.*

*புதிதாக அடையாளம் காணப்பட்டவர்களில் 123 பேர் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களாவர்.*

*புதிய மற்றும் மீண்டும் நோய் பாதிப்புக்குள்ளானவர் களில் சுமார் 8 சதவீதமா னோர், சிகிச்சையை நாடும் போதே ஊனமுற்ற நிலையில் உள்ளனர்.*

*ஆரம்ப நிலையிலேயே நோயாளர்களைக் கண்டறி யவும், அவர்களுடன் நெருங் கிய தொடர்பில் இருந்தவர்க ளைப் பரிசோதிக்கவும் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளார்.*

*அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிலும் தொழுநோயாளிகளுக்கும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் இலவச சிகிச்சை வழங்கப்படுவதா கவும் தெரிவித்துள்ளார்.*

*கொழும்பு தேசிய வைத் தியசாலையின் மத்திய தொழுநோய் கிளினிக்கின் தோல் விசேட மருத்துவ நிபுணர் சத்துராரிய சிறிவர் தன இது குறித்து மேலும் விளக்குகையில், தொழு நோய் என்பது ஒரு தொற்று நோய் அல்ல.*

*பாக்டீரியா உடலுக்குள் நுழைந்த பிறகு நோய் அறிகுறிகள் தென்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.*

*இந்நோய் முதன்மையா கத் தோலைப் பாதித்தாலும், முற்றிய நிலையில் கண்கள் மற்றும் மூக்கு போன்ற ஏனைய உறுப்புகளையும் பாதிக்கலாம்.*

*சிகிச்சை பெறாத நோயாளி இருமும் போது அல்லது தும்மும் போது வெளியேறும் பாக்டீரியாக் களை மற்றவர்கள் சுவாசிப் பதன் மூலம் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.*

*இலங்கையின் மக்கள் தொகையில் சுமார் 95 சதவீதமானோருக்கு இந்த பாக்டீரியாவுக்கு எதிரான இயற்கை எதிர்ப்பு சக்தி உள்ளது.*

*எஞ்சிய 5 வீதமானோ ருக்கே நோய் ஏற்படுவதற் கான வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)*

# ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவருடன் பிரதமர் ஹரிணி அமரசூரிய சந்திப்பு!

*கொழும்பு, ஜன. 22*

*உலக பொருளாதார மாநாடு நடைபெறும் டாவோஸ் நகரில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாடோ கண்டாவை பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய சந்தித்து கலந்துரையாடினார்.*

*இந்த சந்திப்பு உலக பொருளாதார மாநாடு நடைபெறும் சுவிட்சர்லாந்தின் காங்கிரஸ் மையத்தில் இடம்பெற்றது.*

*பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் குழு, சுவிற்சர்லாந்தின் டாவோஸ் - க்லோஸ்டர்ஸ் நகரில் நடைபெறும் 56ஆவது உலக பொரு ளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்கின்றது.*

*பிரதமரையும் அவரது குழுவினரையும் சூரிச் விமான நிலையத்தில், ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியும் தூதுவருமான ஹிமாலி அருணதிலக வரவேற்றார்.*

*"உரையாடலின் உணர்வு" என்ற தொனிப் பொருளில் நடைபெறும் இந்த ஆண்டு உலக பொருளாதார மாநாட்டின் முக்கிய அமர்வுகள் கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகி, 23ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் தொடர்கின்றன.*

*இந்த மாநாட்டில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த அரச தலைவர்கள், அரசாங்க பிரதி நிதிகள், சர்வதேச நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், செயற்பாட்டா ளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட சுமார் 3,000 உயர்மட்ட பிரதிநிதிகள் பங்கேற்று வருகின்றனர். (அ)*

# இஸ்ரேலுக்குள் நுழைந்த இலங்கையர் கைது!

*கொழும்பு, ஜன. 22*

*சட்டவிரோதமான முறையில் இஸ்ரே லுக்குள் நுழைந்த 43 வயதான இலங்கை நாட்டவர் ஒருவரை இஸ்ரேல் பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த இலங்கை யர், ஜோர்தான் எல்லை ஊடாக சட்ட விரோதமான முறையில் இஸ்ரேலுக்குள் நுழைந்துள்ளதாக கூறப்படுகிறது.*


*இஸ்ரேலுக்குள் சட்டவிரோதமாக நுழைந்தமை மற்றும் வெளிநாட்டு குடியு ரிமை கொண்ட ஒருவரை சட்டவிரோத மான முறையில் ஏற்றிச் சென்றமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், கைது செய்யப்ப ட்ட இலங்கையருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*அதற்கமைய, குறித்த இலங்கையருக்கு எதிராக சட்டத்தின்படி, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்ரேல் பொலிஸா ரின் சர்வதேச பிரிவான இன்ரர்போல் கிளை தெரிவித்துள்ளது.*

*அரசாங்க மற்றும் தனியார் துறைகள் ஊடாக இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் சட்டபூர்வமாக வேலை வாய்ப்புகள் வழங் கப்பட்டுள்ளன.*

*இந்தநிலையில், மனித கடத்தல்காரர் கள் மூலம் சட்டவிரோதமாக அந்த நாட் டுக்குள் நுழைய முயற்சிப்பது மிகவும் ஆபத்தானதுடன் உயிருக்கு அச்சுறுத்த லான செயலாகும் என எச்சரிக்கப்பட்டுள் ளது. (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 22 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - தை 08
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். சிறப்பான நாள்.

**இடபம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப் ஆக போய் முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சுவார்த்தை வெற்றியடையும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அதிகாரிகளுக்கு உதவுவீர்கள்.

**கன்னி**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**துலாம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**தனுசு**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**மீனம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக பிரச்சினைகள் வரக்கூடும்.

# யாழ். கல்லுண்டாய் பகுதியில் குப்பை மேடு தீப்பற்றி எரிந்தது!



யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பகுதியில் அமைந்துள்ள குப்பை மேடு நேற்று முன் தினம் மாலை தீப்பற்றி எரிந்துள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கல்லுண்டாய் பகுதியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் குப்பை மேடே இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது.

இது குறித்து மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு தகவல் கிடைத்த நிலையில் அவர்கள் அந்த பகுதிக்கு சென்று நிலைமையை பார்வையிட்டனர்.

பின்னர் விரைந்து செயற்பட்டு யாழ். மாநகர சபைக்கு தகவல் தெரிவித்த நிலையில் அங்கு வந்த யாழ். மாநகர சபையின் தண்ணீர் வாகனம் தீயை அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

குறித்த பகுதியில் உள்ள குப்பை மேடானது இதற்கு முன்னரும் இவ்வாறு பல தடவைகள் தீப்பற்றி எரிந்துள்ளது.

குறித்த குப்பை மேட்டுக்கு அண்மையில் வசிக்கும் மக்களும், கல்லூண்டாய் வீதியால் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்களும் இவ்வாறான சம்பவங்களால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான 2 நாள் பயிற்சி பட்டறை வவுனியாவில்

வவுனியா, ஜன. 22

உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் மற்றும் அதன் சட்டதிட்டங்கள், தொடர்பாக புதிதாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான இருநாள் பயிற்சி பட்டறை ஒன்று வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்த கருத்தரங்கு வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில், 2025ஆம் ஆண்டு முதல் தடவையாக உள்ளூராட்சி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் மற்றும் பெண் உறுப்பினர்களுக்கான இரண்டு நாட்கள் வதிவிட செயலமர்வாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

யுனோப்ஸ் நிறுவனத்தின் விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதியுதவியின் கீழ் வெக்கோட் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இவ் அமர்வில் வெக்கோட் நிறுவனத்தின் பணிப்பாளர் தர்மலிங்கம் கணேஷ் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# மக்களின் எதிர்ப்பை மீறி கழிவு கொட்டமாடடோம்!

## பருத்தித்துறை தவிசாளர் உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 22

மக்களின் எதிர்ப்பை மீறி கழிவு கொட்டமாட்டோம் என பருத்தித்துறை நகரபிதா உறுதியளித்துள்ளார்.

பருத்தித்துறை நகர சபை பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் குப்பை கொட்டுவதற்காக 7.5 ஏக்கர் வயல் காணியை பல ஆண்டுகளுக்கு முன்னர் குடத்தனை வலிக்கண்டி பகுதியில் கொள்வனவு செய்துள்ளது.

குறித்த காணியை சூழ வயல் நிலங்களாகும். குறித்த பகுதியில் கழிவு கொட்டுவதால் தமது விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாகவும், சூழல் மாசுபடும் என்பதாலும் குறித்த நகர சபை காணியில் கழிவுகளை கொட்ட வேண்டாம் என்று குடத்தனை கிராம மட்ட பொது அமைப்புக்கள் நகர சபை தவிசாளர் உட்பட நகர சபை உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை தவிசாளர் உட்பட நகர சபை உறுப்பினர்கள் குறித்த காணியை பார்வையிட சென்ற போதே குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த பருத்தித்துறை தவிசாளர், மக்களின் எதிர்ப்பை மீறி தாம் குறித்த காணியில் கழிவு கொட்ட மாட்டோம் என உறுதியளித்துள்ளார்.

இது விடயமாக கருத்து தெரிவித்த குடத்தனை சமூக மட்ட அமைப்புக்கள், முன்னர் நகர சபை செயலாளராக இருந்தவர் குறித்த காணியில் கழிவு கொட்டமாட்டோம் என கடிதம் மூலம் உறுதியளித்துள்ள போதும் சபை வரும் முன்னர் தற்போதைய செயலாளர் குறித்த காணியில் கழிவுகளை கொட்டி அதனை தீயிட்டு எரித்ததாகவும், உக்காத பிளாஸ்ரிக் கழிவுகளை குறித்த காணியில் புதைத்துள்ளதாகவும் இதனால் சூழல் மாசு நிலத்தடி நீர் மாசு ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். (அ)

# புல்லாவெளி புனித செபஸ்தியார் பெருவிழா!



யாழ்ப்பாணம், ஜன. 22

புகழ் பெற்ற யாழ்ப்பாணம்-வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயப் பெருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில் காலை 6.00 மணியளவில் திருச்செபமாலையுடன் பெருவிழா திருப்பலி ஆரம்பமானது.

பெருவிழா திருப்பலியை அருட்தந்தை எட்வின் நாதன் ஒப்புக் கொடுத்தார்.

புல்லாவெளி புனித செபஸ்தியார் பெருவிழாவில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (அ-05)

# மாற்றுத்திறனாளியை மோதிவிட்டு தப்பிச் சென்ற பட்டா ரக வாகனம்!

யாழ்ப்பாணம், ஜன. 22

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் நேற்று முன் தினம் முற்பகல் 11.00 மணியளவில் விபத்துச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இயக்கச்சி பகுதியில் இருந்து இயக்கச்சி சந்தி நோக்கி பயணித்த மாற்றுத்திறனாளி ஒருவரின் மோட்டார் வண்டியை கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பட்டா ரக வாகனம் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த இயக்கச்சி பகுதியை சேர்ந்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பளை போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற வாகனத்தை அருகில் உள்ள சி.சி.ரி.வி கமெரா மூலம் அடையாளம் காண முயற்சித்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது அரசியல் இலக்குகளை அடைய சமூகத்தில் வன்மம் பரப்புகிறார் அநுர!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 22

ஜனாதிபதி தனது அரசியல் இலக்குகளை அடைய சமூகத்தில் வன்மத்தைப் பரப்பி வருவதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்குச் சென்று மக்களுக்குக் கூறுவதற்குப் புதிய விடயங்கள் ஏதுமில்லை என்றால், அங்குள்ள தமிழ் கலாசாரத்தைப் பாதுகாக்க அவர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசாங்கம் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் மீது பழிவாங்கும் நோக்குடன் செயல்படுகிறது. ராஜபக்ஷ அரசியலில் அல்லது பொதுஜன பெரமுனவில் இனவாதம் கிடையாது, எப்போதும் சரியான பக்கமே நின்றுள்ளனர். முந்தைய அரசாங்கங்கள் மடு தேவாலயம் மற்றும் முல்லைத்தீவு கோவில்கள் போன்ற மதத் தலங்களின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்தனர். பௌத்த பிக்குகள் மற்றும் பிற மதத் தலைவர்களைக் கைது செய்வதன் மூலம் மக்களின் மத நம்பிக்கையை அரசாங்கம் சிதைக்க முயல்கிறது.

தரம் 6 பாடப்புத்தகங்களில் உள்ள சில உள்ளடக்கங்கள் மற்றும் இணைய இணைப்புகள் பிள்ளைகளின் மனநிலையைப் பாதிக்கும் வகையில் இருக்கிறது.

முந்தைய ஆட்சியின் மீது சுமத்தப்பட்ட உகண்டா பணம் மற்றும் லம்போகினி தொடர்பான முறைப்பாடுகள் தற்போது பொய்யென நிரூபணமாகியுள்ளது.

ஊழல் எதிர்ப்பு பற்றிப் பேசியவர்கள் இப்போது அதிகாரத்திற்கு வந்த பிறகு, அதிகாரிகளை மட்டுமே குற்றம் சாட்டி வருகின்றனர். மேலும் அரசியல்வாதிகளை பாதுகாக்கின்றனர்-என்றார். (அ)

# மீனவர்களுக்கு அதிக நன்மை தரும் புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகம்

கொழும்பு, ஜன. 22

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையுடன் இணைந்து கடற்றொழிலாளர்களுக்காக அதிக நன்மைகளை வழங்கக்கூடிய புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

கடற்றொழிலாளர்களின் வருமான நிலை மற்றும் விருப்பத்திற்கேற்ப தமக்கான ஓய்வூதியத் திட்டத்தைத் தெரிவு செய்யக்கூடிய வசதி வழங்கப்பட்டிருப்பது இத்திட்டத்தின் ஒரு முக்கிய சிறப்பம்சமாகும்.

இதன்படி, கடற்றொழிலாளர்கள் 60 வயதை எட்டிய பின்னர் மாதாந்தம் ரூ.5,000, ரூ.10,000, ரூ.15,000, ரூ.20,000, ரூ.25,000 அல்லது அதற்கும் அதிகமான தொகையை ஓய்வூதியமாகப் பெறும் வகையில் இந்தத் திட்டத்தில் இணைந்து பங்களிக்க முடியும்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தின் மற்றுமொரு சிறப்பு என்னவென்றால், 60 வயதிற்குப் பிறகு ஒருவரது வயது அதிகரிக்கும்போது அவர் பெறும்ஓய்வூதியத் தொகையும் அதிகரிப்பதாகும்.

உதாரணமாக, ஒருவர் ரூ.1,000 ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்பு செய்தால், அவருக்கு 64 முதல் 70 வயது வரை ரூ.1,250 உம், 71 முதல் 77 வயது வரை ரூ.2,000 உம், 78 வயதிற்குப் பின்னர் ரூ.5,000 உம் மாதாந்த ஓய்வூதியமாகக் கிடைக்கும்.

மேலதிக நன்மைகளாக, இத்திட்டத்தில் இணைந்திருப்பவர்களுக்கு ஆயுள் காப்புறுதி நன்மைகள் கிடைப்பதுடன், ஓய்வூதியம் பெறுபவர் உயிரிழந்தால் அந்த ஓய்வூதியத் தொகையை அவரது மனைவி அல்லது கணவர் தொடர்ந்து பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. (அ)

# கடற்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 23 பேர் கைது!

கொழும்பு, ஜன. 22

இலங்கை கடற்படையினர் மற்றும் கடலோர காவல்படையினர் ஜனவரி 14 முதல் 19 ஆம் திகதி வரை உள்ளூர் கடல் பகுதியை உள்ளடக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள், வெடிபொருட்கள் மற்றும் சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருபத்தி மூன்று பேர் கைது செய்யப்பட்டதுடன், ஐந்து டிங்கி படகுகள் மற்றும் ஒரு இழுவைப் படகு ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

அதன்படி, திருகோணமலையில் உள்ள ஜெயநகர், தக்வநகர், காலி அகுரல, பலப்பிட்டி மற்றும் நெடுந்தீவு, பருத்தித்துறை கடற்கரை மற்றும் கடல் பகுதிகளை உள்ளடக்கிய இந்த நடவடிக்கைகளின் மூலம் கடற்படையால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன், வெடிபொருட்கள், தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடி படகுகள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புல்முடை பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை, நெடுந்தீவு பொலிஸ் நிலையம், பருத்தித்துறை மீன்வள ஆய்வு அலுவலகம், காலி மற்றும் பேருவளை கடலோர காவல்படை அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டன. (அ)

# 900 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 22

நிட்டம்புவ பகுதியில் சுமார் ரூ.900 மில்லியன் மதிப்புள்ள 61 கிலோ 838 கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த ஒருவர் சிறப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரின் முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி சீரமைப்பு தோல்விப் பொறுப்பை அதிகாரிகளில் மட்டும் சுமத்த முடியாது!

கொழும்பு, ஜன. 22

கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட தோல்விகளுக்கான பொறுப்பை சில தேசிய கல்வி நிறுவனம் அதிகாரிகளுக்கு மட்டும் சுமத்த முடியாது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

முழு மறுசீரமைப்பு செயல்முறையையும் ஆராய்ந்து, பொறுப்பான அனைவருக்கும் எதிராக நடவடிக்கை பரிந்துரைக்க, ஜனாதிபதி விசாரணைக் குழுவைப் போன்ற ஒரு சுயாதீன விசாரணை அமைப்பை நியமிக்க வேண்டும் என சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, ஆறாம் வகுப்பு ஆங்கில பாடத்திட்டத்தில் ஏற்பட்ட சர்ச்சை தொடர்பாக சில அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை போதுமானதல்ல என்றும், ஆறாம் வகுப்பு கல்வி மறுசீரமைப்புகள் ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்டதே இந்தத் திட்டம் எதிர்பார்த்த பலனை வழங்கவில்லை என்பதற்கான சான்று என்றும் கூறினார்.

பாடப்புத்தக அச்சிடல், ஆசிரியர் பயிற்சி, பாடசாலை நேர அட்டவணை மாற்றம் உள்ளிட்டவற்றுக்கு பெரும் பொதுப் பணம் செலவிடப்பட்ட போதும், மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் எந்தப் பயனையும் அடையவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், ஆறாம் வகுப்பு பாடத்திட்ட சர்ச்சை தொடர்பாக தேசிய கல்வி நிறுவனத்தின் துணை இயக்குநர் நாயகம் தர்ஷன சமரவீரா கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளதுடன், மேலும் இரண்டு அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர், தேசிய கல்வி நிறுவனத்தின் இயக்குநர் நாயகம் பேராசிரியர் மஞ்சுள வித்தானபத்திரன விசாரணை முடிவு வரை பதவியிலிருந்து விலகியிருந்தார்.

சமீபத்தில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில், ஆறாம் வகுப்பு கல்வி மறுசீரமைப்புகளை 2027 வரை ஒத்திவைக்க அமைச்சரவை முடிவு செய்தது.

அதே நேரத்தில், தரம் ஒன்று தொடர்பான மறுசீரமைப்புகள் திட்டமிட்டபடி தொடரும் என்றும், எதிர்வரும் 29ஆம் திகதியிலிருந்து திருத்தப்பட்ட தரம் ஒன்று பாடத்திட்டம் அமல்படுத்தப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு-திருமலை இரவு நேர ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்

திருமலை, ஜன. 22

மிக நீண்ட நாட்களாக தடைப்பட்டிருந்த கொழும்பு - திருகோணமலைக்கான இரவு நேர ரயில் சேவை நேற்று முன் தினம் இரவு திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

கடந்த ஓரிரு மாத காலமாக தடைப்பட்ட இரவு நேர குறித்த சேவையானது தற்போது ஆரம்பமானதால் போக்குவரத்து சேவை பொது மக்களுக்காக இலகுபடுத்தப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் கொழும்பு நோக்கி தங்கள் கடமை நிமித்தம் ஆசனப் பதிவுகளை மேற்கொண்டு அதிகமாக இரவு நேர சேவையில் ஈடுபடுகின்றனர்.

இது போன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் குறித்த ரயில் சேவை ஊடாக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்த போதிலும் தம்பலகாமம் பிரதேச சபைக்குட்பட்ட பல ரயில் கடவைகளில் இரவில் வீதி மின் விளக்குகள் இன்மையால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக காணப்படுகிறது.

இது தொடர்பில் தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளருக்கு பல முறை அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை பராமுகமாக இருக்கின்றதை அறிய முடிகிறது. (அ)

# சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலில் "புனித புஹாரி செரீப்" பாராயணம்



அம்பாறை, ஜன. 22

சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் பாரம்பரியமாக ஓதப்பட்டு வந்த "புனித புஹாரி செரீப்" பாராயணம் இம்முறையும் ஓதப்பட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா (ரஷாதி) மற்றும் உலமாக்களினால் தமாம் செய்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். முபாறக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதிச் செயலாளர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். ஹாரூன், பொருளாளர் அல்ஹாஜ் ஏ.எம்.சமீம், மற்றும் உலமாக்கள், வர்த்தகர்கள், நிர்வாகிகள், ஜமாஅத்தினர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


புனித புஹாரி செரீப் பாராயணம், கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, சுமார் ஒரு மாத காலமாக அதிகாலை வேளையில் ஓதப்பட்டும் இரவு இஷாத் தொழுகையின் பின்னர் பயான் நிகழ்வும் இடம்பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கு மாகாண ஆளுநருடன் காலாட் படை தளபதி சந்திப்பு

திருமலை, ஜன. 22

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும், 22ஆவது காலாட் படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் டப்ள்யூ.பி.எம்.கே. ஜி.கே. வீரசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

22ஆவது காலாட் படைப் பிரிவின் 34வது தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் டப்ள்யூ.பி.எம்.கே.ஜி.கே. வீரசேகர, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி திருகோணமலையில் அமைந்துள்ள அந்தப் படைப் பிரிவு தலைமையகத்தில் தமது பதவியின் கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.



# சித்தாண்டி முருகன் ஆலயத்தில் சத்ரு சம்ஹார வேள்வி யாகம்!



காரைதீவு, ஜன. 22

நாட்டின் நன்மை கருதி, இலங்கையில் சித்தர்களின் ஆதி இருப்பிடம் எனக் கூறப்படும் மட்டக்களப்பு சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலயத்தில், இந்த உலகை ஆளுகின்ற 210 சித்தர்களை பூஜிக்க நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அன்று நள்ளிரவில் சத்ரு சம்ஹார வேள்வி யாகம் ஆரம்பமாகி நேற்று அதிகாலை வரை இடம்பெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில், நமசிவாய மகேஸ்வரன் சுவாமிகளின் முன்னிலையில் நேற்று முன் தினம் புதன்கிழமை அதிகாலை மூன்று மணி வரை யாகம் தியானம் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

நிகழ்வில் உலகப்புகழ் பெற்ற சாதனைத் தமிழன் ஈழ நல்லூர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி பாலமுருகன் குழுவினரும் சித்தர்களின் குரல் அன்பர்களுடன் கலந்து கொண்டார்கள்.

நேற்று முன் தினம் மாலை மூலிகை குளியலுடன் ஆரம்பமாகி, வனபோஜனம், 18 சித்தர்கள் சந்நிதியில் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி, வேல் பூஜை மற்றும் இரவு முழுவதும் "தபஸ்" என்னும் உயர்ந்த ஆழ்நிலை தியானங்கள் இடம்பெற்றன. (அ)

# இந்து சமய ஆசிரியர்களின் வாக்குறுதி எடுக்கும் நிகழ்வு



அம்பாறை, ஜன. 22

காரைதீவு பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் வாக்குறுதி எடுக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேசசெயலாளர் ஜி. அருணன் தலைமையில் நேற்று முன் தினம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனனின் வழிகாட்டலுக்கு அமைவாக நடைபெற்ற இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பினை மாவட்ட இந்துகலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டதுடன் ஏற்பாடுகளை பிரதேச இந்துகலாசார உத்தியோகத்தர் திருமதி சிவராஜா சிவலோஜினி மேற்கொண்டார்.


இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவிச்செயலாளர் பி. பிரணவரூபன் மற்றும், கணக்காளர் பாத்திமா றிம்சியா, நிர்வாக உத்தியோகத்தர் திரு து.கமலநாதன், கலாசார உத்தியோகத்தர்கள், பிரிவுகளுக்கான கிளைத்தலைவர்கள் மற்றும் அறநெறி பாடசாலைகளின் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# களுவாஞ்சிகுடியில் மனித நுகர்வுக்கு ஒவ்வாத மீன்கள் கைப்பற்றி அழிப்பு

மட்டக்களப்பு, ஜன. 22

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட களுவாஞ்சிகுடி மீன் சந்தையில் நேற்று முன் தினம் செவவாய்கிழமை மனித நுகர்வுக்கு ஒவ்வாத நிலையில் பழுதடைந்த நிலையில் விற்பனை செய்யப்பட்ட 16 கிலோ கீரி மீன்கள் கைப்பற்றப்பட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்களால் உடனே அழிக்கப்பட்டன.

களுவாஞ்சிகுடி பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இன்றைய தினம் மேற்கொண்ட



விசேட சுற்றிவளைப்பின் மூலம் இவை கண்டு பிடிக்கப்பட்டன.

இதன் போது வியாபாரிக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டு அறிவுறுத்தல்களும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாற்றுத் திறனாளியின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவி வழங்கி வைப்பு

மட்டக்களப்பு, ஜன. 22

சமூக சேவைகள் திணைக்களத்தின் சமுதாய மட்ட புனர்வாழ்வு திட்டத்தின் கீழ், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவிற்கு ரூ. 210,000 பெறுமதியான உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.

இத்திட்டம் குச்சவெளி பிரதேச செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ், சமூக சேவைகள் திணைக்களத்தின் நேரடியான கண்காணிப்புடன் கும்புறுப்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த ராஜகோபன் ரூபாதேவி என்பவருக்கு வழங்கப்பட்டது.

ரூபாதேவி நடக்க முடியாத



மாற்றுத்திறனாளியாக இருப்பதுடன், சக்கர நாற்காலியை பயன்படுத்தி தனது அன்றாட செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார். (அ)


# காட்டு யானை, வன விலங்குகளால் பாதிக்கப்பட்டர்களுக்கான நட்டஈடு

அம்பாறை, ஜன. 22

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் கடந்த வருட பிற்பகுதில் யானை மற்றும் வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட 42 பயனாளிகளுக்கு சுமார் 2 மில்லியன் ரூபா நட்டஈட்டு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் அஸாருத்தீனின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இடம்பெற்ற இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளர் ஏ.எல் மஹ்ரூப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நட்ட ஈட்டு காசோலைகளை வழங்கினார்.

இந் நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தி



யோகத்தர் கே.சிவகுமார்,நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.யூ.பசீல்(வெளிக்களப் பிரிவு), கிராம சேவகர்கள்,காரியாலய உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

நிற்கும் - என்றும் ஜோர்ஜிவா கூறினார்.

டித்வா சூறாவளியால் இலங்கையின் உட்கட்டமைப்பு, விவசாயத்துறைக்கு சுமார் 410 கோடி அமெரிக்க டொலர் (நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதம்) நேரடி சேதம் ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. இந்த நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே 206 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர நிதியை வழங்க அனுமதி அளித்துள்ளது. இந்த நிலையில், சூறாவளியால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்புகளை விரிவாக மதிப்பிடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் விசேட குழு ஒன்று நாளை வியாழக்கிழமை நாட்டுக்கு வரவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, டாவோஸில் நடக்கும் மாநாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவரையும் பிரதமர் சந்தித்துக் கலந்துரையாடினார். நாட்டின் தற்போதைய மறுசீரமைப்பு பணிகள், பொருளாதார நிலைமை தொடர்பில் இந்த சந்திப்பில் பேசப்பட்டன.

அத்துடன், சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினம் உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்புகளில் தொழில் அமைச்சர், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோவும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-அ)

## கல்வி...

தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, தற்போதுள்ள சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி, தேசிய கல்வி நிறுவகத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பின் மூலம், கல்வி மறுசீரமைப்புகளை செயல்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து இதன்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், கல்வி மறுசீரமைப்புகளில் எழுந்துள்ள பிரச்னைகளை தீர்க்க ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் எடுத்த முடிவைப் பாராட்டுவதாகவும், அதற்காக தமது ஆதரவுகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதன்போது, பல்கலைக்கழக கட்டமைப்பு மற்றும் கல்வியை பாதுகாக்க அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கடந்த கால அனர்த்த நிலைமையை எதிர்கொண்ட பின்னர், நாட்டின் பொருளாதார பாதுகாப்பு, அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து துறைகளையும் கருத்தில் கொண்டு, நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் தற்போது செயற்திறனாக நடைமுறைப்படுத்தி வருவதாக இங்கு தெரிவித்த ஜனாதிபதி, இதற்காக ஆதரவு வழங்குமாறும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு அழைப்பு விடுத்தார். (ஐ)

## 16ஆவது...

வடக்கின் நுழைவாயிலாக 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, இந்த ஆண்டு 16ஆவது தடவையாக நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பல்வேறுபட்ட வர்த்தகர்களால் 400இற்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயம், தொழில்நுட்பம், விருந்தோம்பல், கல்வி, உணவு நவநாகரிகம், இதர தொழிற்துறைகள் என பல்வேறுபட்ட வர்த்தக நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் சேவைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்தவும் வடக்கிலுள்ள சமூகங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பல்வேறு வகையான உற்பத்திகள் மற்றும் சேவைகளை அறிந்து கொள்வதற்கும் தெற்கு மற்றும் சர்வதேச தொழில் முயற்சியாளர்கள் வடக்கிலுள்ள சக தொழில் முயற்சியாளர்களைச் சந்தித்து வியாபார பொருளாதார தொழில்நுட்ப ரீதியில் தொடர்புகளை வளர்க்கவும் எமது தொழில் முயற்சியாளர்கள் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அவற்றின் வினைத்திறனான செயல்பாடுகளை அறிந்து பயனடையும் களமாகவே யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி அமைந்துள்ளது - என்றனர். (ஐ)

## புலம்பெயர்...

நேற்றைய தினம் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் ம. பிரதீபனை மாவட்ட செயலகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் டித்வா புயலால் மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மீட்பு, நிவாரண நடவடிக்கைகள் தொடர்பில் அரச அதிபரிடம் உயர்ஸ்தானிகர் கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட உயர்ஸ்தானிகர், “பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்”, என்று கூறினார். (ஐ)

## இருபது...

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் நடைபெற்றது.

உலகக் கிண்ணம் எதிர்வரும் சனிக்கிழமை வரை யாழ்ப்பாணம், கண்டி, தம்புள்ளை உட்பட நாட்டின் பிரதான நகரங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதன்போது, இரசிகர்கள் உலகக் கிண்ணத்துடன் படங்கள் எடுக்கவும் வாய்ப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச மைதானத்தில் நடைபெறும் இலங்கை - இங்கிலாந்து ஒருநாள் போட்டியின்போது இரசிகர்கள் இந்த கிண்ணத்துக்கு அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பை பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பௌத்தத்தை...

காலியில் நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

“அந்நியர் ஆட்சியின்போதுகூட பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனவே, தற்போதைய ஆட்சியாளர்கள் இந்தப் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியாது. நாட்டின் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

1931ஆம் ஆண்டின் பௌத்த விகாரைகள் மற்றும் ஆலயங்கள் (நன்கொடை) கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதன்படி, விகாரைகளுக்குச் சொந்தமான சொத்துகள் விகாரைகளுக்கே உரியவை. நாம் தானமாக வழங்கும் அனைத்து தங்கப் பொருட்களும் ஆலயங்களுக்கு அல்லது விகாரைகளுக்கே சொந் தமானவை. யாராவது இவற்றில் தலையிட முயன்றால் நாட்டுக்கு என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. 1815ஆம் ஆண்டில், இங்கிலாந்தின் மூன்றாம் ஜோர்ஜ் மன்னர் பௌத்தத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஒவ்வோர் அரசியல் கட்சியும் இதனை முன்னோக்கி எடுத்துச் சென்று, மகா சங்கத்தினருடன் இணைந்து அதைப் பாதுகாக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளன - என்றார். (ஐ)

## பரந்தன்...

தொழிற்சாலையின் நிர்மாண பணிக்கு அரசாங்கம் முதல் கட்டமாக 50 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. தொழிற்சாலையின் கட்டுமான பணிகளை 30 மாதங்களில் நிறைவுறுத்த எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 630 கோடி ரூபாய் முதலீட்டில் அரச - தனியார் கூட்டுப் பங்காண்மை மூலம் இந்தத் தொழிற்சாலை இயக்கப்படும் என்று இங்கு உரையாற்றிய வடக்கு ஆளுநர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங் குமரன், அமைச்சுகளின் செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு. முரளிதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ. வேழமாலிகிதன், முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் தலைவர்கள், கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## வடக்கில்...

இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாண மாநகரில் நடைபெறும் இந்த நிகழ்வானது வெறும் ஒரு மாநாடு மட்டுமல்ல, வடக்கு மாகாணத்தின் ஒரு தீர்க்கமான மற்றும் மூலோபாய திருப்புமுனையை நாம் அனைவரும் ஒன்றுகூடிச் சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இயற்கை வளங்கள், மீளெழும் வல்லமை கொண்ட மனித மூலதனம் மற்றும் ஆழமான கலாசாரப் பாரம்பரியம் ஆகியவற்றை கொண்டுள்ளபோதிலும், நீண்டகாலமாக இந்த மாகாணம் எமது நாட்டின் தேசிய மொத்த உற்பத்தியில் மிகக் குறைந்தளவான பங்களிப்பையே வழங்கி வந்துள்ளது. இன்று, “வளர்ச்சியை வலுவூட்டல், நுண்ணறிவுமிக்க புத்தாக்கங்கள்“ என்ற தொனிப்பொருளின் கீழ், அந்த வரலாற்றை மாற்றியமைக்கும் பணியை நாம் ஆரம்பிக்கிறோம்.

இலங்கை, பொருளாதார மீட்சியிலிருந்து நீண்டகால நிலையான வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கத் தயாராகும் இத்தருணத்தில், இந்நிகழ்வானது மிகச் சரியான நேரத்தில் நடைபெறுகின்றது. எந்தவொரு மாகாணமும் பின்தங்கிவிடக் கூடாது என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் “அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரம்“ என்ற தூரநோக்குப் பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழேயே இம்முயற்சி முன்னெடுக்கப்படுகிறது.

எமது வரலாற்றைத் திரும்பிப் பார்க்கையில், வடக்கு மாகாணமானது எப்போதும் “சிறப்புக்கான ஒரு நுழைவாயிலாக“ திகழ்ந்து வந்துள்ளது. அந்தப் பெருமையை மீட்டெடுப்பதே இந்த உச்சிமாநாட்டின் நோக்கமாகும். விவசாயம் மற்றும் கடற்றொழில், சுற்றுலாத்துறை, கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பம், மற்றும் வலுசக்தி ஆகிய நான்கு மூலோபாயத் தூண்களில் கவனம் செலுத்துவதன் மூலம், எமது இளைய சமூகத்தின் திறமையையும், மூத்தவர்களின் அனுபவத்தையும், சர்வதேச மூலதனம் மற்றும் புத்தாக்கங்களுடன் இணைப்பதற்கான ஒரு வரைபடத்தை நாம் உருவாக்குகிறோம்.

இன்று மேற்கொள்ளப்படும் முதலீடுகள், வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு பிரஜைக்கும் நிலையான வேலை வாய்ப்பு, துடிப்பான தொழில் முயற்சிகள் மற்றும் செழிப்பானதொரு எதிர்காலத்தை உருவாக்குவதை உறுதி செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் - என்றார். (ஐ)

## வடக்குக்கு...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை - போராட்டத்தில் ஈடுபடவில்லை. தவறுகளை திருத்திக் கொண்டு சிறந்த முறையில் புதிய கல்வி கொள்கையை அமுல்படுத்துமாறு குறிப்பிட்டோம். ஆளும் கட்சியில் படித்தவர்கள் இருக்கின்றனர் என்று குறிப்பிடப்படுகிறது. ஆகவே, கல்விக் கொள்கையை சிறந்த முறையில் தயாரியுங்கள்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் பற்றி பேசப்படுகிறது. புத்தர் சிலையை பாதுகாப்பதற்காக புத்தர் சிலை அகற்றப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். ஆனால், இரண்டாம் நாளன்று புத்தர் சிலையை பொலிஸார் மரியாதையுடன் அதே இடத்தில் பிரதிஷ்டை செய்தார்கள்.

புத்தர் சிலை விவகாரத்தில் தேரர்கள் இன்றும் சிறையில் உள்ளார்கள். ஆனால், பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் கைது செய்யப்படவில்லை. நாங்கள் விடுதலை புலிகள் அமைப்புக்கு எதிராக போராடினோமே தவிர, தமிழர்களுக்கு எதிராக போராடவில்லை. தமிழ் மக்களுக்கு கதிர்காமத்துக்கு செல்வதற்கு முழுமையாக சுதந்திரம் உள்ளது. ஜனாதிபதி வடக்குக்கு சென்று இனவாதத்தைத் தூண்டிவிடக்கூடாது. அரசாங்கம் தமக்கு ஏற்றால் போல் சட்டத்தை பயன்படுத்திக் கொள்கிறது - என்றார். (ஐ)

## கைதிகளின்...

பொறிமுறையை உருவாக்குவதற்காக 10 பேரை உள்ளடக்கிய வகையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி எம். பி.யான முஜிபுர் ரஹ்மானின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற நெரிசல் குறித்து ஆராய்வதற்கு 2025.03.14ஆம் திகதியன்று மீளாய்வு முறை நடவடிக்கை ஊடாக தண்டனை காலத்தை குறைக்கும் பொறிமுறையை உருவாக்குவதற்கான யோசனை அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது. இந்த யோசனைக்கு அமைச்சரவை 2025.06.02 ஆம் திகதி அனுமதி வழங்கி சிறப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு 2025.07.18 ஆம் திகதியன்று முதலாவதாக கூடி விடயங்களை பரிசீலனை செய்தது. இந்த குழுவில் உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ். துரைராசா, பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன, சட்டமா அதிபர் திணைக் களத்தில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் நெரின் புள்ளே, கலாநிதி வசந்தா சுபசிங்க, பிரதி பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட, வைத்தியர் சிதாரி அபேநாயக்க, நீதியமைச்சின் மேலதிக செயலாளர்களான நிசான் தனசிங்க, பியுமந்த பீரிஸ்,ஹரின் டி ஹெட்டிகே, ஜி.எல். வெலிகல ஆகியோர் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர்.

சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற நெரிசலை குறைப்பதற்கு இந்த குழு இதுவரையில் பரிந்துரை சிபாரிசுகளை முன்வைக்கவில்லை. போதைப்பொருள் குற்றச்சாட்டில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை இல்லாமல் இவர்களுக்கு பிணை வழங்க முடியாது. திணைக்களத்தில் ஆளணி பற்றாக்குறை காணப்படுவதால் அறிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம் காணப்படுகிறது. ஆகவே, இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு புதிய சேவையாளர்களை இணைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தை பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர்

**ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஜன. 22

நாட்டின் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அந்நியர் ஆட்சிக் காலத்தில்கூட பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த பின்னணியில், தற்போதைய ஆட்சியாளர்கள் அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியாது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

காலி பிரதேசத்தில் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருத்துக்களை வெளி



யிட்டார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்-

விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கமைய விகாரைகளுக்குச் சொந்தமானவை விகாரைகளுக்கும், தேவாலயங்களுக்குச் சொந்தமானவை தேவாலயங்களுக்கும் உரியனவாகும். நாம் வழங்கும் தங்க நகைகள் அனைத்தும் விகாரைகளுக்கோ அல்லது தேவாலயங்களுக்கோ சொந்தமானவை. அவற்றில் கைவைக்கச் சென்று நாட்டுக்கு என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது.

1815 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மூன்றாம் ஜோர்ஜ் மன்னர் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றிருந்தார்.

இதை ஏற்றுக்கொண்டு மகா சங்கத்தினருடன் இணைந்து இதனைப் பாதுகாப்பது அனைத்துக் கட்சிகளினதும் கடமையாகும்-என்றார். (அ)

## உலகத்தரம் வாய்ந்ததாக 13 இலங்கை கடற்கரைகள்!

**லோன்லி பிளனட் பரிந்துரை**

கொழும்பு, ஜன. 22

இலங்கையின் 13 கடற்கரைகள் ஆசிய பிராந்தியத்தின் மிகச் சிறந்த கடற்கரை தலங்களாக பட்டியலிடப்பட்டுள்ளன.

உலகின் முன்னணி சுற்றுலா வழிகாட்டியான லோன்லி பிளனட் இந்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான சுற்றுலாப் பயணிகளால் நம்பப்படும் லோன்லி பிளனெட் நிறுவனத்தின் இந்த அங்கீகாரம், இலங்கையின் சுற்றுலாத் துறைக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய உந்துசக்தியாகக் கருதப்படுகிறது.

1340 கிலோமீற்றர் நீளமான கடற்கரையோரத்தைக் கொண்டுள்ள இலங்கை, ஆண்டு முழுவதும் சூரிய ஒளி, அலைச்சறுக்கு வசதிகள் மற்றும் கடல்சார் உயிரினங்களின் வாழ்விடங்கள் எனப் பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.

லோன்லி பிளனெட் பரிந்துரைக்கும் இலங்கையின் சிறந்த 13 கடற்கரைகள் மற்றும் அவற்றின் சிறப்புகள் வருமாறு:-

உனவடுன: ஒட்டுமொத்தமாக மிகச்சிறந்த கடற்கரை.

தலவெல்ல: குடும்பங்களுடன் பொழுதைக் கழிக்கச் சிறந்த இடம்.

வெலிகம: ஆரம்பநிலை அலைச்சறுக்கு வீரர்களுக்குச் சிறந்தது.

கபலன: உயர்தர உணவு அனுபவங்களுக்கு ஏற்றது.

மிரிஸ்ஸ : திமிங்கிலங்களைப் பார்வையிடச் சிறந்த கடற்கரை.

ஹிரிகெட்டிய : அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட கடற்கரை.

பெந்தொட்ட: மேற்கு கடற்கரையோரத்தின் சிறந்த தலம்.

கல்குடா : கிழக்கு கடற்கரையின் அமைதியான பகுதி.

அறுகம்குடா: அலைச்சறுக்கு விளையாட்டுக்கு மிகச்சிறந்த இடம்.

நிலாவெளி: சுனோக்லிங் மற்றும் கடலடி நீச்சலுக்குச் சிறந்தது.

கசூரினா: வடக்கு மாகாணத்தின் சிறந்த கடற்கரை.

கற்பிட்டி : காற்றாடி அலைச்சறுக்கு (Kitesurfing) விளையாட்டுக்கு ஏற்றது.

மாவெல்ல : முழுமையான அமைதிக்கும் ஓய்வுக்கும் மிகச்சிறந்த இடம்.

இந்த சர்வதேச அங்கீகாரம் இலங்கையின் கடற்கரையோரங்களை மீண்டும் உலக வரைபடத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளது. (அ)

## டித்வாவால் மின்சார சபைக்கு ஏற்பட்ட ரூ.20 பில்லியன் நட்டத்தை மின் நுகர்வோரிடமிருந்து வசூலிக்க திட்டம்?

கொழும்பு, ஜன. 22

டித்வா சூறாவளியினால் இலங்கை மின்சார சபையின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள சுமார் 20 பில்லியன் ரூபா நட்டத்தை, மின் நுகர்வோரிடமிருந்து வசூலிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சூறாவளியினால் மின்சார சபையின் மின் கடத்தல் மற்றும் விநியோக வலையமைப்புகளுக்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மின் கடத்தல் கட்டமைப்புக்கு சுமார் 1 பில்லியன் ரூபா பெறுமதியான சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இவை 132,000 கிலோவோட் போன்ற மிக உயர் மின் அழுத்தத்தை பெரிய கோபுரங்கள் மூலம் நீண்ட தூரத்துக்குக் கடத்தும் கட்டமைப்புகளாகும்.

மின்விநியோகக் கட்டமைப்புக்கு சுமார் 19 பில்லியன் ரூபா பெறுமதியான நட்டம் ஏற்பட்டுள்ளது.

இவை துணை மின்நிலையங்களிலிருந்து வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு சிறிய மின் கம்பங்கள் மூலம் மின்சாரத்தை விநியோகிக்கும் கட்டமைப்புகளாகும்.

இந்த நட்டத்தை நுகர்வோரிடமிருந்து உடனடியாக வசூலிக்காமல், காலப்போக்கில் படிப்படியாக மின் கட்டணங்கள் மூலம் அறவிடப்படும் என மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக அச்செய்தி யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கமைய, செலவை ஈடு செய்யும் விலைக் கொள்கையை மின்சார சபை பின்பற்றவேண்டியது அவசியமாகும்.

மின்சார சபை அண்மையில் வருமானத்தை 11.57 வீதத்தால் அதிகரிப்பதற்காக மின் கட்டண உயர்வைக் கோரியிருந்தது.

இருப்பினும், 2026 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான (ஜனவரி-மார்ச்) கட்டணத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தற்போதைய சூழலில் மின் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் ஆர்வம் காட்டவில்லை என்றாலும், அடுத்த காலாண்டு மீளாய்வின்போது மின்சார சபை கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகும்.

2026 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் கட்டணங்கள் மாற்றப்படாவிட்டால், அடுத்த முறை சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கமைய மிக அதிக விகிதத்தில் மின் கட்டணத்தை அதிகரிக்கவேண்டிய தேவை ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியத்தில் மாற்றம்!

கொழும்பு, ஜன. 22

2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரச சேவையில் இணைந்த ஆயிரக்கணக்கான ஊழியர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பிற்குத் தீர்வாக, புதிய ஓய்வூதியத் திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2016 பாதீட்டுத் திட்ட முன்மொழிவின்படி, 01.01.2016 இற்குப் பின்னர் பணியில் இணைந்தவர்களின் நியமனக் கடிதங்களில் "அரசின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு இணங்கவேண்டும்" என்ற நிபந்தனையுடன் ஓய்வூதிய ஏற்பாடு சேர்க்கப்பட்டிருந்தது.

இருப்பினும், புதிய ஓய்வூதிய முறை இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

தற்போதுள்ள ஓய்வூதிய முறையின் கீழ் இவர்களின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில், 2026 பாதீட்டுத் திட்டத்தின் மூலம் நியமனக் கடிதங்களில் சில திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி 2016.01.01 இற்குப் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் நியமனக் கடிதங்கள் இனி, "இந்நியமனம் ஓய்வூதியம் உள்ளதாகும். நீங்கள் விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய முறைக்குப் பங்களிப்புத் தொகை செலுத்தப்படவேண்டும்" என மாற்றியமைக்கப்படவுள்ளது.

இதற்கமைய பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

## பெற்றோரை இழந்த சிறுவருக்கு புதிய வாழ்வு வழங்க நடவடிக்கை!

**கைகோர்க்கும் புலம்பெயர் உறவுகள்**

கொழும்பு, ஜன. 22

டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் பெற்றோரை இழந்த சிறுவர்களின் கல்வி மற்றும் நலன் மேம்பாட்டுக்காக, பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சுடன் இணைந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

இது தொடர்பான சந்திப்பு பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தலைமையில் நடைபெற்றது.

அதற்கமைய, அமைச்சின் முழுமையான கண்காணிப்பின் கீழ், பெற்றோரை இழந்த சிறுவர்கள் உயர் கல்வியை நிறைவு செய்யும் வரை தேவையான அனைத்து செலவுகளையும் ஏற்க தயாராக இருப்பதாக அறக்கட்டளை ஒன்று தெரிவித்துள்ளது.

இதனிடையே, அனர்த்த சூழ்நிலைகளில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான நிரந்தர நிதி அமைப்பின் அவசியம் குறித்தும் பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனே அரசின் முதன்மையான இலக்கு எனவும் பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தெரிவித்துள்ளார். (அ)

## சிங்கப்பூர் ஜனாதிபதியை சந்தித்தார் பிரதமர் ஹரிணி




கொழும்பு, ஜன. 22

சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினத்துடன், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பேச்சு நடத்தியுள்ளார்.

உலகப் பொருளாதாரமன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிற்சர்லாந்து சென்றுள்ள பிரதமர், அங்கு முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டுக்குச் சமாந்தரமாக மேற்படி சந்திப்பை அவர் நடத்தியுள்ளார்.

"இச்சந்திப்பின்போது, 'டித்வா' சூறாவளியைத் தொடர்ந்து இலங்கைக்குச் சிங்கப்பூர் வழங்கிய உதவிகளுக்காக நன்றியைத் தெரிவித்ததோடு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினேன்."-என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.